**கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு. -2013**

கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹர பொறுப்பாண்மை அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவின் பிரகாரம் எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப் படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிலையான வைப்புகளுக்குரிய வட்டி உரிய முறையில் கணக்கிடப்படாமை காரணமாக முதலீட்டுப் பெறுமதி மற்றும் அதன் அடிப்படையில் கிடைக்க வேண்டிய ரூபா 97,562 தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

கீழே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் இல்லாமை அவதானிக்கப்பட்டது.

| | | விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | (i) | சுற்றுப்புற தேவாலயங்களுக்கு நிதி வழங்குதல் | 4,000,000 | நன்கொடை தொகை பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச் சீட்டு செலவின மதிப்பீடு மற்றும் செலவின அறிக்கை |
| | (ii) | தலதா மாளிகைக்கு நன்கொடை வழங்கல் | 1,500,000 | |
| (ஆ) | | யானை தடாக உபகரணங்கள் | 73,350<br>25,250 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| (இ) | | புகைப்பட செலவினம் | 79,500 | செலவின மதிப்பீடு |
| (ஈ) | | பதவியணியினருக்கான செலவினம் | 250,750 | சேவையில் ஈடுபடுத்துவதற்கான கடிதங்கள் |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பனவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 இன் 34 ஆம் இலக்க கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பு அதிகாரச்சட்டம் | |
| (i) 8(1) ஆம் பிரிவு | ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே, கண்டி சுற்றுப்புற தேவாலயங்களின் பஸ்நாயக்க நிலமே அதிகாரப் பிரதேசத்தின் பிரதேச செயலாளர் மற்றும் சனாதிபதியால் நியமனம் செய்யப்படுகின்ற மூன்று உறுப்பினர்களுடன் கூடிய மதியுரைக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், எசல நம்பிக்கைப் பொறுப்பினால் அக்குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 16(3) ஆம் பிரிவு | நம்பிக்கைப் பொறுப்பின் நடவடிக்கைகள் தொடர்பாக வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 168 | அரசுடன் இணைந்த கம்பனியொன்றிடமிருந்து கிடைத்த ரூபா 125,000 தொகைக்காக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 திசம்பர் 22 ஆம் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04.1 ஆம் பந்தி | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டிற்குரிய அமைச்சரினதும் தேசிய வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்தினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 பொருட்கள் மற்றும் வேலை தொடர்பான அரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 1.2.1 | கொள்வனவின் போது தேவையான விபரக் குறிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படாமல் இருந்ததுடன், வழங்குனரின் விபரக் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டதன் காரணமாக ஆகக் குறைந்த விலையை விட ரூபா 26,596 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1. நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கண்டி எசல பெரஹர நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 753,631 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 10,738 பற்றாக்குறையாக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 764,369 தொகையான தேறிய முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டில் எசல பெரஹர நம்பிக்கைப பொறுப்பின் வருமானங்களையும் செலவினங்களையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 4 வருமான விடயங்களில் 17 சதவீதம் முதல் 150 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிப்பு காணப்பட்டதுடன், நினைவிழக்கச் செய்யும் பதவியணியினருக்கான கொடுப்பனவு தவிர ஒவ்வொரு செலவின விடயங்களிலும் 7 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சிலான அதிகரிப்பைக் காண முடிந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பொது பொறுப்பாண்மை வசமிருந்த ரூபா 20,000,000 தொகையான முதலீட்டு தொகையின் பிரகாரம் அந்தந்த ஆண்டிற்குரிய வட்டித் தொகைக்கு சமமான வட்டித் தொகையொன்று பொது நம்பிக்கையாளரால் கணக்கிடப்பட்டு அதில் 4 சதவீதத்தைக் கழித்துக் கொண்டு பெரஹர நடவடிக்கைகளுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்றது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 2,000,000 வட்டித் தொகையில் ரூபா 80,000 நம்பிக்கைப் பொறுப்பிற்கு கிடைக்காமல் போயிருந்தது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டமும் மீளாய்வாண்டு உட்பட எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்காக கூட்டுத்திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்தம் செலவிடப்படுகின்ற நினைவிழக்கச் செய்யும் பதவியணியினருக்கான படிகளுக்காக மீளாய்வாண்டின் போது முன் செலவின மதிப்பீடு ஒன்று இல்லாமல் ரூபா 70,000 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த செலவினங்கள் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 04 செலவின விடயங்களில் 11 சதவீதத்திலிருந்து 24 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நம்பிக்கைப் பொறுப்பின் இலக்கை அடைந்து கொள்ளல்
(இ) செலவினங்களை மேற்கொள்ளல்
(ஈ) முதலீடு
(உ) பாதீடு
(ஊ) கூட்டுத் திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்